# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 396/2012

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சம்பத்குமார் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. சிதம்பரம் | தொழில் | .. - |
| வயது | .. 65 | ஜாதி | .. செங்குந்தமுதலியார் |
| கிராமம் | .. அல்லிக்குட்டை | நாள் | .. 29.09.2021 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

வா.சா.1 – சம்பத்குமார் - குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் ஒரு வீடு சேதடைந்து உள்ளது, மற்றொரு வீட்டை நாங்கள் பராமரித்து வருகிறோம் என்ற விபரத்தை உங்கள் வழக்குரையில் கூறியுள்ளீர்களா என்றால், கூறியுள்ளேன். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் ஒரு வீடு சேதமடைந்து உள்ளது என்றும், மற்றொரு வீட்டை பராமரித்து வருகிறோம் என்றும் கூறியுள்ளீர்களா என்றால், கூறியுள்ளேன். நான் மேற்கண்ட விபரங்களை வழக்குரையிலும் சொல்லவில்லை என்றாலும், சொத்துவிபரத்திலும் சொல்லவில்லை என்றாலும், சரிதான். மேற்படி இரண்டு வீடுகளுக்கும் மின் இணைப்பு உள்ளதா என்றால், உள்ளது. மின்இணைப்பு எண்.13 ஆகும். எந்த கதவு எண்ணிற்கு கொடுக்கப்பட்டது என்றால், அந்த விபரம் எனக்குத் தெரியாது. வழக்குரையில் கதவு எண் குறித்து குறிப்பாக எதுவும் சொல்லவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கான வீட்டுவரி ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. வீடு பாழடைந்து உள்ளதால் வரி செலுத்தவில்லை. மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், ரசீது என்னிடம் இல்லை, வழக்கறிஞரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எப்போது கொடுக்கப்பட்டது என்றால், சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக கொடுக்கப்பட்டது. மின்சாரம் குறைவாக பயன்படுத்துவதால் சமீப காலமாக மின்கட்டண ரசீது அளிக்கவில்லை. வீட்டுவரி கட்டாமலும் இடிந்துபோன வீட்டிற்கு மின்சாரம் பயன்படுத்தி வருகிறீர்களா என்றால், வீட்டின் சுவர்கள் அப்படியே உள்ளது, மேற்கூரை மட்டும் பாழடைந்து உள்ளது. தற்போது அந்த வீடுகளில் யாரும் குடியிருக்கவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 04.09.2017 தேதியிட்ட Reply Statement இல் இன்றைய தேதிவரை மின்சார

கட்டணம் செலுத்தி வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு செலுத்தியதற்கான மின்சார கட்டண ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை, வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவ்வாறு எத்தனை ரசீதுகள் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளீர்கள் என்றால், ஒரு மின்அட்டை, 1 ரசீது கொடுத்துள்ளேன். 02.12.2019 தேதியிட்ட Reply Statement இல் இன்றைய தேதி வரை வழக்கு சொத்தில் உள்ள வீடுகளுக்கு உள்ள மின்சார கட்டணம் செலுத்தி உள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். 02.12.2019 தேதியிட்ட Reply Statement இல் கூறியுள்ளபடி மின்சார கட்டண ரசீது எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லலை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் மின்சார வெள்ளை அட்டை மற்றும் மின்சார கட்டணம் செலுத்தியதற்கான ரசீது வழக்குசொத்திற்கு உண்டானது என்றால், சரிதான். மின்சார வெள்ளை அட்டை பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மின்கட்டண ரசீது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வழக்கு சொத்தில் எப்பொழுதும் சுவாதீனத்தில் இல்லை என்றாலும், சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறேன், அதற்கு மின்சார கட்டணம் செலுத்தி வருகிறேன் என்று கூறுவது பொய் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தான் இந்த வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும், அவர்கள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதால் தான் மின்சார கட்டணத்தை செலுத்தி வருகிறார்கள் என்று சொன்னாலும், சரியல்ல. வழக்குசொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்பதற்கு பட்டாவைத்தவிர வேறு ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. வீட்டின் மொத்த மதிப்பு எவ்வளவு என்றால், சுமார் ரூ.1,80,000/- இருக்கும். காலி இடத்திற்கு என்ன மதிப்பு என்றால், இடம் முழுவதும் கட்டிடமாக உள்ளதால், கட்டிடத்திற்கு தான் மதிப்பு வரும், காலி இடத்திற்கு மதிப்பு வராது. வழக்கு சொத்து எத்தனை சதுரடி கொண்டது என்றால், அதுகுறித்து தெரியாது. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால், மேற்கு பக்கம் மாரியம்மன் கோவில், வடக்கில் மாதேஷ்வரனின் மாமனார் குடியிருந்து வருகிறார், தெற்கு பகுதியில் பார்த்திபன் என்பவர் குடியிருந்து வருகிறார். கிழக்கே இருப்பவர்களின் பெயர் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தில் மேற்கண்ட நான்கு எல்லைகளை குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்தில் எத்தனை சதுரடி இடத்தில் கட்டிடம் அமைந்துள்ளது, எத்தனை சதுரடி இடம் காலியாக உள்ளது என்றால், அந்த விபரம் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தின் விபரத்தில் வழக்கு

சொத்தின் நீளம் அகலம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். அதேபோல் இரண்டு வீட்டிற்கான நீள அகலத்தையும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் வழகக்கு சொத்தில் உண்மையாகவே சுவாதீனத்தில் இருந்திருந்தால் அதுகுறித்து விபரங்கள் எனக்குத் தெரிந்திருக்கும் என்றாலும், நான் சுவாதீனத்தில் குடியிருந்து வராத காரணத்தினால்தான் இந்த விபரங்களை நான் சொல்ல முடியவில்லை என்றால், சரியல்ல. 03.10.1995 தேதியே எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து 1ஆம் பிரதிவாதி பவுனம்மாளுக்கு பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் மூலம் விற்றுவிட்டோம் என்று சொன்னால், சரியல்ல. நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை. ஏற்கனவே மேற்கண்ட ஆவணத்தில் எனது தகப்பனார் கையெழுத்து இட்டதாக 22.12.2015 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் கூறிவிட்டு, தற்போது இந்த வழக்கிற்காக பொய்யாக எனது தகப்பனார் எந்த கையெழுத்தும் போடவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் கூறியுள்ள சாட்சியங்களுக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 1995ஆம் தேதியிலிருந்து வழக்கு சொத்தை பிரதிவாதிகளுக்கு விற்பனை மூலம் சுவாதீனத்தை அளித்துவிட்டதால் வழக்கு சொத்து மீதான உங்கள் உரிமை அற்று போய்விட்டது என்றாலும், 1995ஆம் தேதியிலிருந்து பிரதிவாதிகள் முழுமையான சுவாதீனத்தில் இருந்து வருவதால், எதிரிடை சுவாதீன அனுபவம் மூலம் (Adverse possession) சொத்தின் முழு உரிமையாளர்கள் என்றாலும், சரியல்ல. இறந்துபோன வல்லி இடும்ப முதலியாரின் முதல் மனைவியின் வாரிசுகள் அனைவரையும் இந்த வழககின் தரப்பினராக சேர்க்காததால் இந்த பாகப்பிரிவினை வழகக்கு உரிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள்தான் முழு சுவாதீனத்திலும் இருந்து வருவதால் வழக்கு சொத்தானது 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு முழு உரிமையானது என்றும், எனவே, நான் பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நம்பிக்கையின் பேரிலும், நெருங்கிய உறவுமுறையை கருத்தில் கொண்டு பவுனம்மாள் என்பவர் இந்த பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தின் மூலம் வழக்கு சொத்தை வாங்கி விட்டார் என்றாலும், இது சட்டப்படி செல்லாது என்ற காரணத்தினாலும், நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது என்பதை அறிந்து இந்த கிரைய ஆவணத்தையும், அதில் உள்ள

என்னுடைய கையெழுத்தையும் மறுத்து இந்த வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. ஆகவே, வாதிகள் ஆகிய எங்களுக்கு இந்த சொத்தில் உரிமை இல்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கு தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், சரியல்ல. ஆர்.ஞாலத்தரசு என்பவர் என்ன உறவு முறை என்றால், அவர் எனது அக்காவின் கணவர் ஆவார். அவருக்கும் உங்களுக்கும் உறவுமுறை எப்படி இருக்கும் என்றால், சுமூகமான உறவுமுறை. இன்றைய தேதி வரை எங்களுக்குள் நல்ல பழக்கம் உண்டு என்றால், சரிதான். அவர்தான் 1995 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளார் என்றால், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை. அவர் கையெழுத்து உங்களுக்குத் தெரியுமா என்றால், நான் பார்த்ததில்லை. என் முன்னால் தான் அவர் கையெழுத்து செய்தார் என்றாலும், அதை மறுத்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு எதிராக சென்றுவிடும் என்பதால், சாட்சி கையெழுத்து மற்றும் ஆவணத்தையும் இல்லை என்று கூறுகிறேன் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / சம்பத்குமார்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.